29.10.2025

<u>அ.வ.எண்.101/2022</u>

வா.சா.1 அய்யாவு த/பெ. கைலாச கவுண்டர்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விவசாயம் மற்றும் லேவாதேவி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் பிரதிவாதிகள் எந்த கடனும் பெறவில்லை ஆனால் முதல் பிரதிவாதியின் கணவர் தனசேகரன் என்னிடம் கடன் வாங்கினார். இறந்து போன தனசேகரன் என்னிடம் 5.9.2019ம் தேதியில் ரூ.6லட்சம் கடன் வாங்கினார். அந்த தொகையை இறந்துபோன தனசேகரன் குடியிருந்த சிங்களாந்தபுரம் வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் பணம் கொடுத்தபோது யார் என்னுடன் வந்தார்கள் என்றால் என்னுடன் வேறு யாரும் வரவில்லை. அந்த கொடுக்கல் வாங்கல் எனக்கும், இறந்துபோன தனசேகரனுக்கும் தான் தெரியும். என்னிடம் பணம் வாங்கிய அன்றே தனசேகரன் காசோலை அதற்காக கொடுத்தார். அந்த காசோலையை 20நாட்கள் கழித்து வசூலுக்கு கொடுக்கும்படி தெரிவித்தார் அந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. காசோலையை நான் வசூலுக்கு கொடுத்த தேதியில் தனசேகரன் உயிருடன் இல்லை என்றால் சரிதான். தனசேகரன் 10.9.2019 தேதியில் எனக்கு காசோலை கொடுத்திருந்தர் என்பது சரிதான். ஆனால் அந்த தேதியில் வசூலுக்கு கொடுக்காமல் வேறு தேதியில் வசூலுக்கு கொடுத்துள்ளேன் என்றும், தனசேகரன் கடன் வாங்கியிருந்தால் 10.9.2019 தேதியில் நான் வசூலுக்கு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல். காசோலை தனசேகரன் உடையது தான் ஆனால் அதில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. 5.9.2019 தேதியில் இருந்து 20நாட்கள் என்றால் 25.9.2019ம் தேதி வாக்கில் இருக்கும். காசோலை திருப்பப்பட்டவுடன்நான் பணத்தை இறந்துபோன தனசேகரனின் மனைவி மற்றும் மகனிடம் கேட்டேன். அவர்கள் பணத்தை தருவதாக சொன்னார்கள் ஆனால் தரவில்லை என்பதால் வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான். தனசேகரன் அவசர செலவு என்று கேட்டதற்கு என்ன அவசர செலவு என்று கேட்டேனா என்றால் வீட்டுமனை வாங்க பணம் வேண்டும் என்று கேட்டார். அப்போது நானும், தனசேகரன் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான். தனசேகரன் சீட்டு நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவரிடம் சீட்டில் நானும் உறுப்பினராக இருந்து பங்கேற்றேன் என்றால் சரிதான், அதற்கான நோட்டில் என்னிடம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சீட்டு நடந்ததற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 5.9.2019ம் தேதியில் 2ம் பிரதிவாதி கிருஷ்ணகிரியில் உள்ள நிறுவனத்தில் பணியாற்றினார் என்றும், அவருடன் முதல் பிரதிவாதி இருந்து வந்தார் என்றும் அந்த சமயத்தில் நான் குறிப்பிடும் வீட்டில் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், தனசேகரனுக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. தனசேகரன் இறந்த பின்பு துர்லாபம் அடையவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் தனசேகரனுக்கும் வரவு செலவு இருந்தால் 10.9.2019ம் தேதியில்

காசோலையை வசூலுக்கு கொடுத்திருப்பேன் என்றும், இல்லை என்பதால் தான் அவர் இறந்த பின்னர் காசோலையை வசூலுக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/-K.Ayyavu

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.P

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.